செ.வெ.எண்: 985 நாள்: 14.11.2008

# பத்திரிக்கை குறிப்பு

## தமிழ்நாடு சமூகநல வாரியம் சென்னை 15.

### "தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் கைவினைப் பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனை."

## வாத்சல்ய மேளா 2008

தமிழ்நாடு சமூகநல வாரியம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவும் பொருட்டு அவ்வப்போது கண்காட்சிகளை நடத்தி வருகின்றது. இந்த ஆண்டும் மத்திய சமூகநல வாரியத்தின் உதவியுடன் தமிழகத்தைச் சார்ந்த 50 சுய உதவி குழுக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்கள், ஐம்பொன் மற்றும் செயற்கை ஆபரணங்கள், மரச் சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள், கண்ணாடிப் பொருட்கள், மென் பொம்மைகள், தோல் பொருட்கள், வாழ்த்து அட்டைகள், பாய் மற்றும் படுக்கை விரிப்புகள், கடல் சார்ந்த கலைப் பொருட்கள், ஆய்த்த ஆடைகள், கைத்தறி மற்றும் பட்டுப் புடவைகள், ஊறுகாய், ஜாம், தேன் மற்றும் உணவுப் பொருட்கள், டெரக்கோட்டா, பட்டு மாலைகள், மசாலாப் பொடிகள், பிளாஸ்டிக் பொருட்கள், பாக்கு மட்டையால் ஆன பொருட்கள், சணல் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், காகிதப் பொருட்கள் ஆகியவற்றுடன் கூடிய கண்காட்சி வருகின்ற **14.11.2008** வெள்ளிக்கிழமை முதல் **16.11.2008** ஞாயிறு மாலை வரை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற உள்ளது.

மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவினைத் தொடங்கி வைத்து பேருரையாற்ற உள்ளார். இவ்விழாவிற்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தலைமை ஏற்க உள்ளார். திருமதி. கவிஞர் சல்மா , தலைவி, சமூகநல வாரியம், வரவேற்புரை வழங்க உள்ளார்.

14.11.2008 தொடக்க விழாவிற்கு பின், 15 மற்றும் 16 தேதிகளில் காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை விற்பனைக் கண்காட்சி நடைபெறும். அவ்வமயம் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

15.11.2008 அன்று இவ்விழாவின் தொடர்ச்சியாக காலை 10.00 மணிக்கு அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் காப்பகத்தில் பயன் பெறும் குழந்தைகளின் 500 தாய்மார்களுக்கு "குழந்தைகள் நலம், சத்துக்குறைவு மற்றும் தாய்பால் கொடுத்தலின் அவசியம்" குறித்து யுனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன் விழிப்புணர்வு முகாம் நடைபெறும். இந்நிகழ்வுகளை மத்திய சமூகநல வாரியத் தலைவி திருமதி.பிரேமா கரியப்பா அவர்கள் துவக்கி வைக்க உள்ளார்.

மேலும், குழந்தைகள் தினவிழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு மத்திய சமூகநல வாரியத்தின் தலைவி அவர்கள் பரிசளித்து வாழ்த்துரை வழங்க உள்ளார். தொண்டு நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் கூட்டமும் நடைபெறவுள்ளது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளை திருமதி.ரொக்கையா (எ) சல்மா , தமிழ்நாடு சமூகநல வாரியத்தலைவி தலைமை தாங்க, திரு.ந.ச.பழனியப்பன், இ.ஆ.ப., தமிழக அரசின் சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை முதன்மைச் செயலர் அவர்கள் மற்றும் யுனிசெஃப் பொறுப்பு அதிகாரி திரு.தாமஸ் ஜார்ஜ் அவர்கள் , மாநகர நம்பிக்கையாளர்கள் ஆலயத்தின் பேராயர் தவத்திரு. முனைவர் கே.பி.யோஹனன் அவர்கள் , ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா துணை மேலாளர் திரு.ஜி.பி.குமார், மற்றும் திருமதி.ஆஸ்மா பாத்திமா , நிர்வாகி , தரக் கட்டுப்பாடு , ஐ.டி.சி.லிட். ஆகியோர் வாழ்த்துரை வழங்கவும் உள்ளார்கள்.

கண்காட்சியின் முடிவில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.